# மாகாணக் கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை 2025

| | | |
|---|---|---|
| தரம் :- 10 | நாடகமும் அரங்கியலும்<br>Drama & Theatre | நேரம் – 3மணி |
| | 51 T 1, 11 | |

**எல்லா** வினாக்களுக்கும் விடை தருக

1 தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **(1) (2) (3) (4)** என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

1. நாடகத்தில் பார்வையாளருடன் நேரடியாகத் தொடர்புபடுபவர்

   (1) நடிகன் (2) நெறியாளர் (3) காட்சியமைப்பாளர் (4) தயாரிப்பாளர்

2. ஆற்றுவோரும் பார்ப்போரும் உணர்வு ரீதியாக ஒன்றிக்கும் கலைவடிவமாக அமைவது

   (1) சிற்பம் (2) ஓவியம் (3) நாடகம் (4) கைவினை

3. பாத்திரத்தை பார்வையாளருக்கு சுட்டிப்பாக வெளிப்படுத்துவது

   (1) ஒலி (2) இசை (3) ஒளி (4) காட்சி

4. முன் தயாரிப்பின்றி நடிகனால் நிகழ்த்தப்படுவது

   (1) ஆற்றுகை (2) ஊமம் (3) படிமம் (4) புதிதளித்தல்

5. பாடலே அரங்காக அமையும் நாடக வடிவம்

   (1) கூத்து (2) இசைநாடகம் (3) யதார்த்தநாடகம் (4) இலக்கியநாடகம்

6. பேசாப்பாவனை நாடகத்தில் முதன்மைபெறும் அம்சமாக அமைவது

   (1) உடல் (2) குரல் (3) உணர்வு (4) வேடமுகம்

7. ஆற்றுகைக்கலையின் இயல்புகளில் ஒன்றாக அமைவது

   (1) நிலையியற் கலை (2) கணப்பிரசன்னமானது (3) ஒருவழித்தொடர்பாடல்

   (4) மீளுருவாக்கக்கூடியது

8. பார்வையாளர் ஒரு பக்கத்தில் அமரும் அரங்கு

   (1) வட்டக்களரி (2) கரலிய (3) படச்சட்டஅரங்கு (4) காமன்பொட்டல்

9. ஆரொடு நோகேன் நாடகத்தில் இறுதியில் வரும் நாடகத்தின் பெயர்

   (1) கனவு (2) நனவு (3) ஆசை (4) கல்வி

Past Papers Wiki

10. பாத்திரத்தின் வயது , தோற்றம் , பால்நிலை என்பன வெளிப்படுவது

(1) சமூகவியல்பண்பு (2) உணர்ச்சிப்பண்பு (3) உளவியல்பண்பு (4) பௌதீகப்பண்பு

11. பின்வருவனவற்றில் கதவடித்துப்பாடுதலுடன் தொடர்புடைய சடங்கு

(1) மாம்பழத்திருவிழா (2) யமசங்காரம் (3) வேட்டைத்திருவிழா (4) மானம்பூச்சடங்கு

12. ஆரொடுநோகேன் நாடகத்தின் மோடி

(1) யதார்த்தமோடி (2) யதார்த்த விரோதமோடி (3) மோடிமை கலந்த யதார்த்தம் (4) மோடிமை

13. பறைமேளக்கூத்தின் தலைவன்

(1) அண்ணாவியார் (2) காமன்மாஸ்ரர் (3) ஒண்டிப்புலி (4) மூப்பன்

14. சொக்கரியின் அரங்கவெளி

(1) களத்துமேடு (2) கரலிய (3) தானயம்பொல (4) வீதிய

15. ஆடும் வீடும் எனும் அரங்க விளையாட்டு

(1) உடற்பயிற்சிக்கானது (2) உளப்பயிற்சிக்கானது (3) குரற்பயிற்சிக்கானது

(4) கருத்துான்றல் பயிற்சிக்கானது

16. பாத்திரத்தை தெரிவு செய்பவர்

(1) மேடைமுகாமையாளர் (2) நெறியாளர் (3) நினைவூட்டுனர் (4) காட்சியமைப்பாளர்

17. குளிர்த்திச் சடங்கு நிகழ்த்தப்படும் மாதம்

(1) மாசி (2) சித்திரை (3) வைகாசி (4) ஆனி

18) நடிகர்கள் மறைந்து நிற்பதற்கு உதவும் திரை

(1) காட்சித்திரை (2) தொங்குதிரை (3) முன்திரை (4) பக்கத்திரை

19. பின்வருவனவற்றுள் இயல்பற்ற ஆக்கியல் அசைவு எது?

(1) வயோதிபருக்குரிய அசைவு (2) அதிகாரிக்குரியஅசைவு (3) பேய்க்குரிய அசைவு

(4) பிச்சைக்காரனுக்குரிய அசைவு

20. வில்லுப்பாட்டு , கதாப்பிரசங்கம் போன்ற கலைகள்

(1) கட்புலகலைகள் (2) பேச்சுக்கலைகள் (3) வாசிப்புக்கலைகள் (4) கட்புலசெவிப்புலக்கலைகள்

21. பிறிதொரு நாட்டில் இருந்து வந்தமையினால் இசைநாடகம் பெற்ற பெயர்

(1) பார்சி நாடகம் (2) ஸ்பெசல் நாடகம் (3) அண்ணாவி மரபு (4) கொட்டகைக்கூத்து

22) பின்வருவனவற்றுள் ஆற்றுகைக் கலை அல்லாதது

(1) இசை (2) நடனம் (3) நாடகம் (4) சிற்பம்

23. தப்பி வந்த தாடி ஆடு என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

(1) சி.மௌனகுரு (2) குழந்தை.ம.சண்முகலிங்கம் (3) வேலு சரவணன் (4) மாவை.நித்தியானந்தன்

24. ஆகார்யஅபிநயம் என்பது

(1) பேச்சு (2) முகபாவம் (3) ஆடையணி (4) உடலசைவுகள்

25. காமன்கூத்து பிரதானமாக ஆடப்படும் பிரதேசம்

(1) யாழ்ப்பாணம் (2) மலையகம் (3) முல்லைத்தீவு (4) மட்டக்களப்பு

26. தவத்திருசங்கரதாஸ் சுவாமிகள்

(1) கூத்துக்கள் (2) இசைநாடகங்கள் (3) உரையாடல்நாடகங்கள் (4) சிறுவர் நாடகங்கள்

27. ஆற்றுவோரும் பார்ப்போரும் சந்திக்கும் இடம்

(1) கோயில் (2) வைத்தியசாலை (3) மைதானம் (4) அரங்கு

28. உடக்குப்பாஸ்கு ஆடப்படும் பிரதேசம்

(1) தலைமன்னார் (2) முருங்கன் (3) பேசாலை (4) மடு

29. வடபாங்கு என்பது

(1) மட்டக்களப்பில் (2) மன்னாரில் (3) யாழ்ப்பாணத்தில் (4) மலையகத்தில்

30. இராமநாடகம் எவ்வகையான கூத்து

(1) தென்மோடி (2) வடபாங்கு (3) வடமோடி (4) கோவலன்கூத்து

31.அண்ணமார் வழிபாட்டுடன் தொடர்புடைய மலையகக்கூத்து யாது?

(1) பொன்னர்சங்கர் (2) அர்ச்சுணன்தபசு (3) காமன்கூத்து (4) வீரபத்திரர்ஆட்டம்

32. இயமன் பாத்திரத்தில் பிரசித்திபெற்ற இசைநாடகக் கலைஞர்

(1) சரவணமுத்து (2) மார்க்கண்டு (3) செல்வரத்தினம் (4) கிருஸ்ணாழ்வார்

33. ஆரொடுநோகேன் நாடகத்தில் வரும் ராஜ்குமார் பாத்திரத்தின் இயல்புகளில் ஒன்று அல்லாதது எனக் கருதத்கூடியது

(1) தோற்றத்தில் நேர்த்தியாக இருப்பவர் (2) தான் எண்ணுவதே சரி என நினைப்பவர்

(3) பிள்ளைகளில் அக்கறையற்றவர் (4) போலி கௌரவம் பார்ப்பவர்

34. “அம்புலிமாமா அழகழசொக்கா…………” எனும் பாடல் வரிகள் இடம்பெற்ற நாடகவகை

(1) நிருத்திய நாடகம் (2) பா நாடகம் (3) பாடசாலை நாடகம் (4) சிறுவர் நாடகம்

35. மரபுவழிக்கூத்துக்களில் பயன்படுத்தப்படும் அரிதாரம் என்பது

(1) மேடை (2) மேடைப்பொருள் (3) கைப்பொருள் (4) ஒப்பனைப்பொருள்

PAST PAPERS WIKI

36. இவ் ஒளி விளக்கின் பெயர்

(1) பரப்பொளி (2) பொட்டொளி (3) கீற்றொளி (4) நிறச்சக்கரம்



37. இங்கு வெளிப்படுத்தப்படும் உணர்வு வெளிப்பாடு

(1) கவலை (2) துக்கம் (3) மகிழ்ச்சி (4) கோபம்



38. படத்தில் காட்டப்பட்டுள்ள கிராமியக் கலைவடிவம் யாது?

(1) கும்மி (2) கோலாட்டம் (3) கரகம் (4) காவடி



39. சிறுவர் நாடகங்களின் தந்தை என அழைக்கப்படுபவர்

(1) சி.மௌனகுரு (2) குழந்தை.ம.சண்முகலிங்கம்

(3) சு.வித்தியானந்தன் (4) க.சிதம்பரநாதன்



40. படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கின் பெயர் யாது?

(1) காமன்பொட்டல் (2) கரலிய (3) வட்டக்களரி (4) படச்சட்டமேடை



## பகுதி -2

**கவனிக்குக**

**முதலாம்** வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

(1) 1. கட்புலக்கலை வடிவம் ஒன்றின் பெயரைக் குறிப்பிடுக? (1புள்ளி)

2. நடிகனின் நடிப்பினை வழிப்படுத்துபவர் யார்? (1புள்ளி)

3. சிங்கள "நாடகம" ஆற்றுகை வடிவம் நிகழ்த்தப்படும் அரங்கவெளி யாது? (1புள்ளி)

4. ஊமம் சார்ந்த அரங்க விளையாட்டு தருக? (1புள்ளி)

5. ஆடல் பாடலை பிரதானமாக கொண்டமையும் தமிழ்ப் பாரம்பரிய அரங்கு யாது? (1புள்ளி)

6. வேடமுகம் எந்த அரங்கமூலகமாகக் கருதப்படுகிறது? (1புள்ளி)

7. முல்லைமோடி என அழைக்கப்படும் கூத்து யாது? (1புள்ளி)

8. இலங்கையில் ஆற்றுகை எனும் அரங்கசஞ்சிகையை வெளியிடும் நிறுவனம்யாது? (1புள்ளி)

9. வானொலி நாடகத்தின் பண்புகள் இரண்டு தருக? (2புள்ளி)

10. நாடகபாத்திரம் ஒன்றின் சமூகவியற் பண்புகள் இரண்டு தருக? (2புள்ளி)

(2) (1) அரங்கவெளி என்றால் என்ன? படச்சட்டமேடைக்குரிய பிரதான நடிப்பிடங்களை படம் மூலம் வரைந்து அடையாளப்படுத்துக? (4புள்ளி)

(2) எழுத்துரு எழுதும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் நான்கு தருக? (4புள்ளி)

(3) நீர் நாடகமும்அரங்கியலும் பாடத்தைக் கற்கும் போது வாசித்த எழுத்துரு ஒன்றைக் குறிப்பிட்டு அது தொடர்பான அனுபவத்தை சுருக்கமாக விளக்குக? (4புள்ளி)

(3) (1) அரங்கவிளையாட்டு என்றால் என்ன? இரண்டு அரங்க விளையாட்டுக்களை குறிப்பிடுக? (4புள்ளி)

(2) அரங்கவிளையாட்டுக்கள் மூலம் வளர்க்கப்படும் திறன்கள் எவை? (4புள்ளி)

(3) "அரங்கவிளையாட்டுக்கள் நடிப்பிற்கு மிகவும் உறுதுணையாக உள்ளன"இக் கூற்றினை சுருக்கமாக விளக்குக? (4புள்ளி)

Past Papers Wiki

(4) (1) நடிப்பின் போது நடிகனின் உடல் , குரல் பயன்படுத்தப்படும் முறை பற்றி உமது அவதானிப்புக்களை தருக? (4புள்ளி)

(2) நடிப்பின் போது கற்பனை , அவதானம் பயன்படுத்தப்படும் முறை பற்றி உமது அவதானிப்புக்களை தருக? (4புள்ளி)

(3) நடிப்பில் மூச்சுப்பயிற்சி , குரல் பயிற்சி , உளப்பயிற்சி , தளர்வுப்பயிற்சி என்பவற்றிற்கான பயன்பாடுகள் ஒவ்வொன்று தருக? (4புள்ளி)

(5) (1) கூத்தின் ஆற்றுகைப் பண்புகளைத் தருக? (4புள்ளி)

(2) காத்தவராஜன்கூத்து பற்றி விளக்குக? (4புள்ளி)

(3) வேட்டைத்திருவிழா , குளிர்த்தி பற்றி சுருக்கமாக விளக்குக? (4புள்ளி)

(6) (1) ஆரோடுநோகேன் நாடகத்தை எழுதியவர் யார்? இந்த நாடகத்தின் இலக்குப் பார்வையாளர் யார்? (4புள்ளி)

(2) ஆரொடுநோகேன் நாடகத்தின் பாத்திரங்களை பட்டியற்படுத்துக? (4புள்ளி)

(3) மேற்கூறப்பட்ட நாடகத்தில் உமக்குப் பிடித்த பாத்திரம் ஒன்றைக் குறிப்பிட்டு அதற்கான காரணங்களை தெளிவுபடுத்துக? (4புள்ளி)

(7) பின்வருவனவற்றுள் யாதாயினும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(1) இசைநாடகம்

(2) நாடகத்தில் அசைவுகள்

(3) புதிதளித்தல்

(4) நடிகனுக்கான பண்புகள்

(5) நால்வகை சித்திரிப்பு

WWW.PastPapers.WiKi



Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library